# கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்



மு அஷோக்

அப்போ அவனுக்கு கல்யாணம் செஞ்சிக்கணும்னு ஆசை வருமே..அந்த வயசு.

*3* வயசு! *LKG* படிக்கிறான்.ஸ்கூலுக்கு போக ஆரம்பிச்ச முதல் ரெண்டு நாள் விடாம அழுதுகிட்டே இருந்தான் கிளாஸ்ல. மூணாவது நாள் அழலாம்னு நினைக்கிறப்போ கூட படிக்கிற அந்த தேவதையை பார்த்துட்டான். நிஷா*!!*

நிஷாகிட்ட என்ன புடிச்சிதுன்னு தெரியல...அது வச்சி இருக்க டிசெம்பர் பூவா, போட்டு இருக்க ரெட்டை குடுமியா, பேட்ஜ் குத்தி இருக்க அழகா, எதுன்னு தெரியல ஆனா மொத்தமா பிடிச்சிருச்சி இவனுக்கு. இனிமே சனி ஞாயிறு கூட ஸ்கூலுக்கு வந்துடணும்னு முடிவு பண்ணிட்டான்.

மிஸ், போர்டுல *ABCD* எழுதிப்போட்டு இருக்காங்க. காதல் இவன் கண்ணை மறைச்சதுனால *L* மட்டும்தான் தெரியிது. நிஷாவையே பார்த்துகிட்டு இருக்கான். ஆனா நிஷா இவனை சட்டைபண்ணவே இல்ல. இப்போ என்ன செய்யலாம்னு யோசிக்கிறதுக்குள்ள லஞ்ச் டைம் வந்துடுச்சி. எல்லாரும் சாப்பிடறாங்க. நிஷா முயல் பொம்மை போட்ட வாட்டர் பாட்டில் வச்சி இருக்கு.

நாமளும் முயல் பொம்மை போட்ட வாட்டர் பாட்டில் அப்பாவை வாங்கி தர சொல்லணும்னு நெனச்சிக்கிறான். சாப்பிட்டதும் கொஞ்ச நேரம் தூங்கலாம். தூங்கியாச்சி. தூங்கி முழிச்சதும் ஸ்கூல்ல வேலை செய்யிற ஒரு பாட்டி எல்லாருக்கும் தலைவாரிவிட்டு சாப்பிட பிஸ்கட் குடுப்பாங்க.

அவுங்க கூட ஒரு நாயும் வரும். பேரு பிளாக்கி*(Blacky)*. பொண்ணுங்ககிட்டயே பேசமாட்டான் ஆனா பேரு கண்ணன்னு இருக்குமே அந்த மாதிரி கிடையாது. அந்த நாய் கருப்பு கலர்ல இருக்கும் அதுனால அதுக்கு பேரு பிளாக்கி.

பாட்டியும் ப்ளாக்கியும் வந்துட்டாங்க. நிஷாவுக்கு குடுமி கலையவேயில்லை. ஆனா இவனுக்கு தலை பரட்டைத்தலை ஆகி இருக்கு. தலைவாரிவிட்டு பிஸ்கட் குடுத்தாங்க இவனுக்கு. இந்த சந்தர்ப்பத்தை எப்படி *use* பண்ணலாம்னு யோசிச்சி, அவனோட பிஸ்கட்டை ப்ளாக்கிக்கு குடுத்தா நிஷா நம்மள பத்தி பெருமையா நெனைக்கும்னு நெனச்சி ப்ளாக்கிக்கு குடுத்துட்டு நிஷாவை பாக்குறான்.



அசோக் மு. ஜப்பானில் 23 வருடங்களாக IT துறையில் இருப்பவர்.
கவிதை, சிறுகதைகள், கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டவர். ஜப்பானின் சிறந்த நகைச்சுவை பேச்சாளர். தோக்கியோ மாநகரின் பட்டிதொட்டியெங்கும் மற்றும் பன்னாட்டு தமிழ் சங்கங்கள் நடத்தும் பட்டிமன்றங்கள் எங்கும் இவர் பேச்சுக்கள் தெறிக்கும். மனைவி, மகளுடன் தோக்கியோவில் இருபது வருடங்களுக்கு மேலாக வசிப்பவர்.

நிஷா, அதுக்கு எப்போ பிஸ்கட் தருவாங்கன்னு அந்த பாட்டியை பார்த்துகிட்டு இருக்கு. மனசு ஒடஞ்சி போனவன்.. ப்ளாக்கி இவனை பெருமையா பார்த்ததை கவனிக்கல.

ஸ்கூல் விட்டாச்சு. இவனை கூட்டிகிட்டு போக அவனோட அப்பா வந்துட்டாரு டூ வீலர்ல கிளம்பிட்டாங்க வீட்டுக்கு. இவனுக்கு பின்னாடி நிஷாவும் உக்கார்ந்துக்கிட்டு வந்தா எப்படி இருக்கும்னு யோசிச்சிகிட்டே போறான்.

வீடு வந்துடுச்சி. ஸ்கூலுக்கு போன புள்ளை பசியோட வந்து இருக்கும்னு அவனோட அம்மா பாதுஷா எடுத்து சாப்பிட சொல்றாங்க.

பாதுஷா சாப்பிடுறப்பவும் நிஷா ஞாபகமாவே இருக்கு. காதல்னால வயித்துக்குள்ள பட்டாம்பூச்சி பறக்குற மாதிரி இருக்கு. அது என்ன *Feel* ன்னு சரியா தெரியல அவனுக்கு.

சாப்பிட்டு முடிச்சிட்டு அம்மாகிட்ட போய் சொல்றான், அம்மா எனக்கு வயிறு என்னமோ பண்ணுதுன்னு.

நாலு பாதுஷா ஒரே நேரத்துல தின்னா அப்படிதான் இருக்கும்ன்னு சொல்றாங்க.

அமைதியா வந்துடறான். கொஞ்ச நேரம் விளையாடினான், டிவி பார்த்தான். நைட் வந்துடுச்சி. சாப்பிடணும்.

இன்னும் வயிறு அப்படியேதான் இருக்கு. சாப்பாடு வேணாம்னு சொன்னா கொமட்டுலயே குத்திடுவாங்கன்னு தெரியும் அவனுக்கு. அதுனால ரெண்டு வாய் சாப்டுட்டு தூங்கிட்டான்.

காலைல அவுங்க அம்மா எழுப்பி விடுறதுக்குள்ள முழிச்சிட்டான்.

நைட் கனவுல நிஷா வந்துதான்னு தெரியல. சின்ன பையன்தான பாவம் மறந்து இருப்பான். எழுந்து *tooth brush* எடுத்துக்கிட்டு பல் தேய்க்க போய்ட்டான்.

அவனோட அம்மாவுக்கு சந்தோஷம் தாங்க முடியல. அவனோட அப்பாகிட்ட சொல்றாங்க..என்னங்க நேத்து வரைக்கும் ஸ்கூலுக்கே போகமாட்டேன்னு அடம்பிடிச்சவன் இன்னைக்கி பார்த்தீங்களா அவனே ரெடி ஆகுறான்...நான் சொல்லல, அவன் கண்டிப்பா டாக்டர் ஆயிடுவான்னு.

இதைக்கேட்டதும் அவனோட அப்பா நீட் கோச்சிங் எங்க சேக்கலாம்ன்னு யோசிக்க ஆரம்பிச்சிட்டாரு.

பல்தேய்க்க போனவன் வந்துட்டான். அம்மா குளிக்கவைங்க ஸ்கூலுக்கு லேட் ஆகுதுன்னு சொல்றான்.

*இரு தங்கம், அம்மா இட்லி எடுத்து வச்சிட்டு வந்துடறேன்.*

*அதெல்லாம் முடியாது இப்போவே வாங்க.*

*என்னங்க அந்த இட்லி எல்லாம் எடுத்து ஹாட் பாக்ஸ்ல போட்டுடுங்க நான் தங்கத்தை குளிக்கவச்சிட்டு வந்துடறேன்.*

*இவன் டாக்டர் ஆனா நம்மள இட்லி கடைல வேலை செய்ய வச்சிடுவான் போல இருக்குன்னு பயந்துகிட்டே கிட்சனுக்குள்ள போய்ட்டாரு அப்பா.*

*குளிச்சாச்சி, சாப்ட்டாச்சி. நாலு இட்லி வச்சி லஞ்ச் பாக்ஸும் ரெடி. அதுல ரெண்டு இட்லியை நிஷாக்கு லன்ச்ல குடுக்கணும்னு நெனச்சிக்கிறான். ஸ்கூலும் வந்துடுச்சி. ஆனா க்ளாஸ்ல நிஷாவை காணல. இவனுக்கு க்ளாஸ்ல நாலு பக்கமும் blackboard இருக்கமாதிரி கண் இருட்டுது.*

*நிஷா இல்லாத க்ளாஸ்ல இருக்க புடிக்கல. அழுது அடம்பிடிச்சி வீட்டுக்கு போய்டலாமான்னு யோசிக்கிறான். பாதியில போனா அம்மாகிட்ட லன்ச் பாக்ஸ்லயே அடி விழும்னு தெரிஞ்சிபோய்டுச்சி. அமைதியா கடவுள்கிட்ட prayer பண்றான். நிஷா ஸ்கூலுக்கு வந்துடணும்னு. ஹுஹும் நிஷா வரல. இன்னைக்கி இல்லன்னா என்ன நாளைக்கி வந்துதான ஆகணும்னு சமாதானம் பண்ணிகிறான்.
இவனுக்கு வயிறுல பட்டாம்பூச்சி பறந்ததுல லன்ச் டைம்ல பசிக்கவேயில்லை.
ஸ்கூல் முடிஞ்சிடுச்சி.
அம்மா கேக்குறாங்க ஏன் தங்கம் இட்லி சாப்பிடவேயில்லை?
வயிறு வலிச்சிதும்மா
(ஒரு பொய் சொல்ல, ஒரு உண்மையை பயன்படுத்திக்கிறான். பின்னால டாக்டர் ஆகுறானோ இல்லையோ கண்டிப்பா கம்ப்யூட்டர் இன்ஜினியர் ஆயிடுவான்)
மத்தியானமே குழந்தை சாப்பிடலையே...நைட்டாவது நல்லா சாப்பிடட்டும்னு இவனோட அப்பா, இவனை ரெஸ்டாரண்டுக்கு கூட்டிகிட்டு போனாரு. போய் உக்கார்ந்து ஐஸ்க்ரீம் ஆர்டர் பண்ணிகிட்டான். அதே நேரத்துல நிஷாவும் அதோட அப்பாவும் ரெஸ்டாரண்ட் உள்ள நுழையிறாங்க. மனசுக்குள்ள இவனுக்கு Mario Man கேம்ல எட்டு லெவல் தாண்டிட்ட சந்தோஷம்.
நிஷாவும் அதோட அப்பாவும் இவனுக்கு எதிர்ல இருக்க டேபிள்ல உக்கார்ந்துட்டாங்க. நிஷா இவனை பார்த்த மாதிரி உக்கார்ந்து பாஸ்தா ஆர்டர் பண்ணிக்கிச்சி. ஐஸ்க்ரீம், பாஸ்தா எல்லாம் வந்துடுச்சி. நிஷா பாஸ்தாவை ஸ்பூன்ல எடுத்து வாயில வைக்கிறதை மேட்ச் பண்ணி இவனும் ஐஸ்க்ரீமை வாயில வைக்கிறான்.*

அந்த நேரம்னு பார்த்து வேற யாரோ இவனோட வயசு பையனும் அவனோட தாத்தாவும் உள்ள வந்து, நிஷா டேபிளுக்கு பக்கத்துக்கு டேபிள்ல உக்கார்ந்தாங்க. அதுல இவனோட வயசு பையன் நிஷாக்கு பக்கத்துல உக்கார்ந்தான். அதை பார்த்ததும் இவனுக்கு கோவம் வருது.

ஆனா எதுவும் செய்ய முடியல. நிஷா இவனை பாக்க ஆரம்பிச்சிது. குதூகலமாயிட்டான். இப்போ நிஷாவை பாக்குறதா இல்லை ஐஸ்க்ரீமை சாப்பிடுறதான்னு யோசிச்சிகிட்டே ஐஸ்க்ரீம் மொத்தத்தையும் சாப்பிட்டு முடிச்சிட்டான்.



நிஷா அதோட முகத்தை திருப்பிக்கிச்சி. அப்போதான் புரிஞ்சிது இவனுக்கு, அதுவரைக்கும் நிஷா பார்த்தது இவனை இல்ல, ஐஸ்க்ரீமைன்னு.

வீட்டுக்கு கிளம்பிட்டாங்க. அடுத்த நாள் ஸ்கூலுக்கு போய்ட்டான். அன்னைக்கும் நிஷா வரல. தூரத்துல இருக்க *sintex* டேங்க்ல தண்ணி சொட்டுறதை பார்த்துகிட்டு சோகமா உக்கார்ந்து இருந்தான்.

அப்போ இவனோட மிஸ்ஸும் பக்கத்துக்கு க்ளாஸ் மிஸ்ஸும் பேசிக்கிறாங்க, நிஷாவோட அப்பாக்கு *transfer* ஆயிடுச்சாம். அதுனால வேற ஊருக்கு போறாங்களாம்.

ஞாயமா இப்போ *sintex* ல சொட்டுன தண்ணி இவனோட கண்ல சொட்டி இருக்கணும். ஆனா இந்த பர்த்டேக்கு அப்பாகிட்ட புது *iPad* கேட்கலாம்னு நெனச்சிக்கிறான். அடுத்த நாள், நிஷா இல்லாத ஸ்கூலுக்கு போகவே பிடிக்கல. ஆனா போய்த்தான் ஆகணும். பாட்டியும் ப்ளாக்கியும் வர்ற நேரத்துக்குதான் ஸ்கூலுக்கு வந்தான்.

மறுபடி அவனோட வயிறுல பட்டாம்பூச்சி பறக்குது. காரணம், அவனோட க்ளாஸ்ல அன்னைக்கிதான் *join* பண்ண மோனிகா!!

மோனிகா அப்பாவுக்கும் வேற எங்க இருந்தோ இங்க *transfer* ஆகி இருக்கு. மொனிக்காகிட்ட என்ன புடிச்சிதுன்னு தெரியல...அது கண்ல வச்சி இருக்க மையா, நெத்தில வச்சி இருக்க பொட்டா, காதுல இருக்க கம்மலா, எதுன்னு தெரியல ஆனா மொத்தமா பிடிச்சிருச்சி இவனுக்கு.

இனிமே சனி ஞாயிறு கூட ஸ்கூலுக்கு வந்துடணும்னு முடிவு பண்ணிட்டான்.
பாட்டி இவனுக்கு தலை வாராமலே பிஸ்கட் குடுத்தாங்க.
அதை இவன் ப்ளாக்கிக்கு குடுத்துட்டு பெருமையா மோனிகாவை பார்த்தான்.
பிளாக்கிக்கு இவனோட எண்ணம் புரிஞ்சிடுச்சி.
இனிமே இவன் குடுக்குற பிஸ்கட்டை சாப்பிடவே கூடாதுன்னு முடிவுபண்ணிடுச்சி